# செய்திக் குறிப்பு

## தேசிய போட்டிகளில் பதக்கம் வென்ற விளையாட்டு வீரர்/வீராங்கனைகளுக்கு SDAT ஊக்க உதவித் தொகை.

2017–2018– ஆம் கல்வி ஆண்டில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் உயர்நிலை/மேல்நிலைப்பள்ளி மற்றும் கல்லூரி/ பல்கலைக் கழகத்தில் பயிலும் தலைச்சிறந்த விளையாட்டு வீரர்/வீராங்கனைகளுக்கு வழங்கப்படும் ஊக்க உதவித் தொகை திட்டத்திற்கான திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு வீரர் வீராங்கனைகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் உயர்நிலை/மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு **ரூ.10000/-ம்,** கல்லூரி/பல்கலைக் கழக விளையாட்டு மாணவர்களுக்கு **ரூ.13000/–ம் ஊக்கத் தொகை** வழங்கப்படவுள்ளது.

01.07.2016 முதல் 30.06.2017முடியவுள்ள காலக் கட்டத்தில் தேசிய அளவில் விளையாட்டில் பதக்கங்கள் பெற்றவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள். குழு போட்டிகளில் முதல் இரண்டு இடங்களையும், தனிநபர் போட்டிகளாயின் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். தேசிய அளவிலான போட்டிகள் அங்கீகரிக்கப்பட்ட தேசிய விளையாட்டு சம்மேளனங்கள்,இந்திய பள்ளி விளையாட்டுக்கள் கூட்டமைப்பு, இந்திய விளையாட்டு ஆணையம்/ மத்திய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம் மற்றும் அகில இந்திய பல்கலைக்கழகங்களின் சங்கம் ஆகியவற்றினால் நடத்தப்பட்டிருக்க வேண்டும்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், **(SDAT)**, புனித தாமஸ்ரோடு, பாளையங்கோட்டை, அண்ணா விளையாட்டரங்கில் செயல்பட்டு வரும் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலரின் அலுவலகத்தில் **ரூ.10 விண்ணப்பத் தொகையினை** செலுத்தி பெற்றுக் கொள்ளலாம் அல்லது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இணைய தளமான www.sdat.gov.in லிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை நேரிடையாக 30.08.2017 – ந்தேதிக்கு முன்னர், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அலுவலகம், புனித தாமஸ்ரோடு, அண்ணா விளையாட்டரங்கம், பாளையங்கோட்டை, என்ற முகவரியில் அலுவலக நேரத்தில் தக்க அசல் சான்றிதழ் மற்றும் நகல் ஆகியவற்றுடன் நேரில் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 0462–2572632 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

மேற்கண்ட தகவலை மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்கள் தமது செய்திகுறிப்பில் தெரிவித்தார்கள்.

மாவட்ட விளையாட்டு மற்றும்
இளைஞர் நலன் அலுவலர்,
திருநெல்வேலி.